660

16 AUG 1919

660
3.19



# திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளின் மஹா உற்சவ ஞாபகம்

## மதுவிலக்கம்.

...d of Hope" Tuticorin.

...8-1919.

...பிரஸ், தூத்துக்குடி.

O6:417
N19
108114

159/1783 660/2.19

ஐயா நான்பாவி என்ற வர்ணமெட்டு.

இராகம்—நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி.

குடியினால் வருந்தீது—தன்னைக்
கூறவும் முடியாது

அழகொளிர்மேனி சருகெனவாடும்
அசதியும் மறதியும் வந்துறவாடும்—ஊட்ட
களவுபோய் கொலைமயல் தருகொடுமதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

ஆடையுமுரிய அங்கமுந்தெரிய
அசுத்தவெண்ணுரைசளி கோழையுஞ்சொரிய—வெய்ய
காடுறைமிருக மெனச்செய்யுமதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

நெஞ்சைவாட்டும் நினைவையுமகற்றும்
நித்திரைசோம்பலை நித்தமும்புகட்டும்—கெட்ட
கஞ்சாவெறியினும் வெறியிகுமதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

ஆக்கியசோற்றுப் பானையையுடைக்கும்
ஆணமுங்கறியையுந் தெருவினிற்படைக்கும்—கழுகு
காக்கையும்விரும்பாக் கடைகெட்ட மதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

ஈரலைத்துளைக்கும் இரத்தத்தைக்குடிக்கும்
ஈளையிருமல்க்ஷய ரோகத்தைக்கொடுக்கும்--அந்த
காரத்தில்விடுக்குங் களங்கமார்மதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

மனைவியினன்பை மறந்திடவைக்கும்
மக்களின்மொழிகளை விஷமெனநினைக்கும்-தேடு
கனதனமழிக்குங் காதகமதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

செய்யபொற்பணிதுணி செழுவயலுறைவீடு
செப்புக்குடந்தவலைச் சட்டியும் ஈடு—ஐயோ
கையிலும் ஓடு தந்திடும்மதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

அடிபிடிசண்டையோ தினமும் ஓயாது
அடிதண்டம் அபராதம் ஜெயிலுந்தப்பாது-கெட்ட
கடிவிலங்காக்கு மியல்புடைமதுவைக்
கனவிலுங் கருதலாமோ. (குடி)

சிஷ்டசவியோர் முனிவரின்காவல்
திகழ்மதுவிலக்கவை நிறைகநல்லாவல்—அன்பீர்
கஷ்டமுமுண்டோ கடைத்தேறவென்றே
கைவிடுவீர் மதுவை. (குடி)

முத்திநெறி என்ற வர்ணமெட்டு.

இராகம்—கமாஸ். தாளம்-ஆதி.

விரும்பாதே விரும்பாதே
விஷம்நிறைந்த மதுபானம்
விரும்பாதே விரும்புவையேல்
வேறில்லை மதியீனம். (விரு)

குடியழிக்கும் மதுபானம்
குலமழிக்கும் மதுபானம்
மிடியளிக்கும் மதுபானம்
விரும்பாதே மதுபானம். (விரு)

அறிவுதனைப் புறமோட்டும்
அழகுதனை மிகவாட்டும்
நெறிபிசக வழிகாட்டும்
நிரயமதில் விழத்தாட்டும் (விரு)

விழிபுதைப்பார் முகஞ்சுழிப்பார்
மீண்டுமதை யேகுடிப்பார்
இழிவிதப்பா இதைவிட்டப்பா
ஈனமது பானமப்பா. (விரு)

இல்லாளைக் கலங்கவைக்கும்
இன்மகவை ஏங்கவைக்கும்
நல்லாரை நடுங்கவைக்கும்
நல்லறிவைத் தூங்கவைக்கும் (விரு)

மங்கை திருமங்கிலியம்
மைந்தனணி சங்கிலியும்
தங்கநகை சரப்பளியும்
தவரணைக்கே போமொழியும் (விரு)

ஈரல்தனை எரித்துவிடும்
இருதயத்தை அரித்துவிடும்
ஆருடலைக் கெடுத்துவிடும்
ஆவிதனைப் பறித்துவிடும் (விரு)

மதுபுரியும் பலகோட்டி
வகுக்கரிது வரையேட்டில்
முசவாழ்விற் கொருஈட்டி
மூத்தவளே தினப்பேட்டி (விரு)

எமதுசபை நன்னோக்கம்
ஈனமிகு மதுவிலக்கம்
அமைதியன வழியொழுக்கம்
அமைந்திலகத் திருந்தியக்கம் (விரு)

இப்பாடல்கள்
கொழும்பு "ஜனமித்ரன்" பத்திராதிபராகிய,
வித்வான் M. A. பீரிஸ் அவர்களால்
இயற்றப்பெற்றது.

## சுயாதீனம்— அடிமைத்தனம்.

சிநேகிதர் இருவருள் நடந்த ஓர் சம்பவத்தின் சாராப்ஸம்;—

மதுப்பிரியனாகிய மனோல் என்னும் தன் சிநேகிதனைச் சந்தித்துக்கொண்ட சக்கரீ யென்பவர் சொன்னதாவது; சிநேகிதனே! மதுவிலக்குச் சபையில் உட்பட்டு "மதுபானத்தை ஒருபொழுதும் அருந்தேன்" என்னும் உறுதிமொழிச் சீட்டுத்தந்து அத்துர்ப்பழக்கத்தைத் தயவுசெய்து தள்ளமாட்டாயா!

மித்ரா! என்ன! அடிமைத் தனத்திலிருக்க ஏவுகிறாய். நான் உறுதிமொழிச் சீட்டு எழுதித் தரமாட்டேன். ஏனெனில் என் சுயாதீனம் என்னைவிட்டகன்றுவிடும், என்றான் மனோல்.

இதைக்கேட்டதும் குறுநகை பூத்து பதில் உரைப்பார் சக்கரீ என்பவர்: அப்பப்பா! என்ன அதிசயமான பதில் கூறினாய். சுயாதீனமா போய்விடும்? சுயாதீனம் என்பதுதானென்ன? நமதுபிரியம்போல் செய்துகொள்ளும் சகலமும்சுயாதீனம் பற்றித்தானோ? சுகாதாரம், ஒழுக்கம், தெய்வ வழிபாடு இவைகளுக்கு விரோதமாய் மனம்போனபோக்கெல்லாம் போய்க்கொண்டிருப்பதுதான் சுயாதீன இலக்ஷணமாகும்? அப்படித் தன் இஷ்டப்படிக்கெல்லாம் திரிபவன் தன்னை அடக்கியா

7A
3-23



ளும் சுயாதீனத்தை யிழந்து போவதோடுகூட, தன்னையும் இழிவான அடிமைத்தனத்துக்கு உள்ளாக்கிக்கொள்ளுகிறுன் என்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறதன்ளுே? ஆனபடியால் நேசனே! துர் ஆசை, துர்ப்பழக்கம், முதலியவற்றை நீக்குவதால் சுயாதீனம் போய்விடுகிறதென்றெண்ணுவது மதியீனம். இன்னமும் சற்று கவனிக்கவேண்டும் சுயாதீனமென்பதெது? தன்னை அடக்கியாளும் திறமையையே சுயாதீனமென்று கூறத்தகும். அன்றியும், துர்வழி, துர்செய்கை இன்னின்னதென்று உணர்ச்சிக்குப்பட்டவுடனே அதை நீக்க வழி தேடுவதே சுயாதீனத்தின் குறிப்பு.

சுருங்கச்சொல்லின், துர்ப்பழக்கங்கள் எதெது நம்மிடம் சஞ்சாரம்செய்கிறதென்று நுணுநுணுக்கமாய் ஆராய்ந்து, அவைகளில் இனிமேல் ஒருபோதும் நாட்டம்வைப்பதில்லையென்னும் பிரமாணிக்கத்தைக் கையாடுபவனே சுயாதீனன் என்று அழைக்கப்படுவான், எனப் புத்திகூறி கீழ் கண்ட கதையை அவனுக்குச் சொல்ல, வெகு கவனமாய்க் கேட்கலாயினன் மனேல்.

## கதை

ஓர் ஊரில் ஐஸ்வரியவானுன ஒரு வாலிபன் இருந்தான் அவனும்உன்னைப்போலவே "மதுவை அருந்தேன்" என்னும் உறுதிமொழிச்சீட்டுத்தா

மல். மிகக்கடினமாயிருந்துவந்தபோதிலும்; கடைசியாய், நியாயத்தைக்கண்டுபிடித்து மதுவையொருபொழுதும் அருந்துவதில்லையென்று மனத்தில் மட்டும் தீர்மானப்படுத்திக்கொண்டு, மதுவிலக்குச் சபை உறுதிமொழிச்சீட்டுக் கொடுக்க மனமில்லாதவனாயிருந்துவரும் நாளில், ஓர் சுபதினத்தன்று, மதிமோசத்தால் ஓர் மதுக்கடைக்குள் புகுந்து ஒருபைண்ட் விஸ்கி பாட்ல் வாங்கி அந்தரங்கமாய் தன் சட்டை ஜேபில் நுழைத்து வைத்துக்கொண்டு, ஓர் தனிமையான இடத்தில் நின்றுகொண்டு, திறப்போமா, வேண்டாமா, என்று தனக்குள்ளே யோசித்து மயங்கிக்கொண்டிருந்தான். மனச்சாட்சி அவனைத் தடுக்கிறது. திரும்பவும் மனச்சாட்சியைத் தேற்றுவதும் ஆற்றுவதுமாயிருந்து சிந்தை தடுமாறி உளற ஆரம்பிக்கிறான்.

Q6:417 N19

ஓ! மதுவே! நான் உன்னை நேசிக்கிறேன். நீ எனக்கு அவசியம் வேண்டியதுதான். நான் உன்னைக்கைவிடேன் என்கிறான். அப்பால்யோசித்து மனத்தைர்யத்துடன், நல்லது!

நீ என் எஜமானா? நான் உன் எஜமானா? என்று வாதாடுகிறான். கடைசியாய், இதை நான் ஒரு முடிவுக்குக்கொண்டு வாராமற் போகிறதில்லையென்ற வைராக்யத்தோடு,

நீயோ விஷபானம்
நானோ அதைத் தடுக்கவல்லவன்
நீயோ நீச வஸ்து
நானோ பகுத்தறிவுடையவன்.

ஆகையால் என்னை மேற்கொள்ள உன்னால் முடியுமா? முடியாது. ஒரு நீசவஸ்துவால் ஒருமனிதன் அபஜெயமடைவதானால், பெரு கேவலமன்றோ? சரி, சரி இனிச்சகியேன். மதுவிலக்குச் சபைதனில் உட்பட்டு பிரதிக்ஞைச் சீட்டுக்கொடுப்பேன், இன்றே செய்வேன், இக்கணமே செய்வேன்; என்று தன் கையிலிருந்த பாட்டிலை கோபத்துடன் உரக்கக் கீழே போட்டுடைத்துவிட்டு மனந்திரும்பினான் என்று சக்கரியென்பவர்சொல்லி முடிக்கவே, சுயாதீனம் எதுவென்றும் அடிமைத்தனம் எதுவென்றும் கண்டுணர்ந்த அவ்விளைஞன் மதுவிலக்குப் பிரதிக்ஞைச் சீட்டுக்கொடுத்தான். அவன் வாழ்நாட்களும் சிறந்து விளங்கியது.

குறிப்பு:— இதை வாசிக்கும் நண்பர்களே! நமது முன்னேற்றத்துக்குத் தடையாயிருக்கும், இந்நீச மதுபானத்தை வெறுத்து நலத்தை நாடுவதற்கு இதுவே தகுந்ததருணம். ஆகையால் மதுவிலக்குச் சபையானது இதற்குத்தகுந்த கருவியாயிருக்கிறதென்பதையும் எந்தச்செலவுமின்றி பிரதிக்ஞைச்சீட்டுப்பெற கீழ்கண்ட சபை எச்சமயமும் தயாராயிருக்கிறதென்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்ளலாயிற்று.

The "Band of Hope" 14, Victoria Street,
Tuticorin.

5-8-19